தோட்டங்களாக இருந்தாலும், சர்க்கார் தோட்டங்களாக இருந்தாலும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரேமாதிரி ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதில் நியயம் இருக்கிறதா? இல்லையா? அதன்படி கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய ஊதியங்கள் என்பது பல்வேறு வேலைகளில், பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு தரங்களிலே நிர்ணயிக்கப்படுகின்றன. அது தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், அரசு பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தை உருவாக்குகின்றபொழுது ஆண்டுக்காண்டு இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த மக்களுக்காக நாம் தொழில் கொடுத்தாக வேண்டும்; குடியமர்த்தியாக வேண்டும். அவர்களுக்குத் தெரிந்த தொழில் தேயிலைத் தோட்டத் தொழில் என்பதால்தான் காடுகளிலேயுங்கூட மிகுந்த கஷ்டத்தோடு தேயிலைத் தோட்டங்களாக மாற்றலாம் என்ற முயற்சியை மேற்கொண்டு மத்திய அரசின் உதவியோடு விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம். அப்படி விஸ்தரிக்கப்படவில்லை என்றால் இலங்கையிலிருந்து வரும் மக்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியாது. ஆகவே, விஸ்தரிப்பை நாம் கைவிட்டுவிட இயலாது. அதே நேரத்தில் ஐந்தாண்டுக் காலத்தில், இளந்தளிராக இருப்பவைகளுக்கு எந்த அளவிற்கு வருமானம் வரும் என்பதும் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, முதலீட்டையும் ஏற்கனவே நடைபெற்று வரும் செலவுகளையும் மனத்தில் வைத்துத்தான் அரசு சில முடிவுகளை எடுக்கிறது. இருந்தாலும், இவ்வளவு இழப்பு இருந்தாலுங்கூட பெரிய அளவிற்கு வித்தியாசம் இல்லாத அளவிற்கு நாம் கூலியை நிர்ணயித்திருக்கிறோம். தனியார் தோட்டங்களில் இப்பொழுது எடுத்திருக்கும் முடிவுப்படி கொடுப்பது ரூ. 10.70; நாம் ரூ. 9.52 கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முயற்சிகள் மேலும் மேலும் வளர்ந்து நல்ல நிலைமையை அடைகின்றபொழுது விரைவிலே தனியார் தோட்டத்திலே தருகின்ற அந்தக் கூலியைக் கொடுக்கின்ற அளவிற்கு நாம் எல்லோருமே சேர்ந்து முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தேவகோட்டையில் வனத்துறைச் சரக அலுவலகம் 1-4-1981 முதல் முறைபடி செயல்பட்டு வருகிறது.

குமரி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 127—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் குமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) அவ்வாறென்றால் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென சுமார் 200-300 ஏக்கர் நிலம் வேண்டி, அம் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கேட்டுள்ளது. நிலம் கிடைத்த பின் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாட்டில் மற்றப் பகுதிகளில் இல்லாத ரப்பர், கிராம்பு ஆகிய பிரத்தியேகப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன என்பதாலே, ரப்பர், கிராம்பு, நெல், தென்னை போன்ற பயிர்களுக்கு அதிகமான நோய்கள் ஏற்பட்டிருப்பதால் அந்த மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அந்த மக்கள் சார்பிலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட பிரத்யேகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக விரைவிலே அந்த ரிசர்ச் சென்டரை அமைக்க அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நிலத்தைக் கேட்டிருக்கிறோம், கிடைத்தவுடன் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுக்கு சொந்தமான இடங்கள் பேச்சிப்பாறை அரசு வேளாண்மைத் துறைக்குச் சமீபத்திலே இருப்பதன் காரணமாக, அந்த வேளாண்மைத் துறைக்குச் சொந்தமாக இருக்கிற அன்னாசி பண்ணையை ஒட்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசால் முடியும் என்ற காரணத்தினாலே, அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?